விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.06.2002) தொலைபேசி 3378 ஒலி 179




## சமாதானத்திற்காக அனைவரும் பாடுபட வேண்டும்

# கொடிய யுத்தத்தினால் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம்!

### ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ்

(அலுவலக நிருபர்)

**கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இன அழிவை ஏற்படுத்தி வரும் கொடிய யுத்தத்தினால் எவருமே எதையும் சாதித்தது கிடையாது. யுத்தத்தினால் எவருமே வெற்றியடையவும் இல்லை. இதற்கு மாறாக எங்கள் பிள்ளைகளையே நாம் இழந்துள்ளோம்.**

**இந் நிலையில் தற்போது ஏற்பட்டுவரும் சமாதான சூழ்நிலை தொடர அனைத்து மக்களும் பாடுபட வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று மாலை யாழ் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அறைகூவல் விடுத்தார்.**

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று யாழ் செயலகத்தில் திணைக் களத் தலைவர்கள், பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தொடர்ந்து பேசுகையில் (08ம் பக்கம் பார்க்க)



அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர மாக்கார் யாழ் பிரதம தபாலகத்தில் தொடர்பு நிலையத்தைத் திறந்து வைக்கும் காட்சி.



அமைச்சர் இம்தியாஸ்

### புலிகளின் குரல் வானொலி நிறுவனத்தின்

## முத்தமிழ் கலையரங்க நிகழ்வு

## இன்று நல்லூரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி நிறுவனத்தினால் மாதாந்தம் நடத்தப்படும் ''முத்தமிழ் விழா கலையரங்கம்'' எனும் சிறப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சாம்பவி தணிகைமாறனின் நெறியாள்கையில் ... நுண்கலைககல்லூரியினரின் நடனம், வைத்திய நிபணர் கெங்காதரன் அவர்க்ளின் புல்லாங்குழல் கச்சேரி, புலிகளின் குரல் நிகழ்சித் தயாரிப்பாளர் நா. யோகேந்திரநாதனின் நெறியாள்கையில் புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்கள் வழங்கும் ''ஒரே ஒரு சாவு'' எனும் நாடகம்

## சமாதானப் பேரவை உறுப்பினர் புலிகள் சந்தித்துப் பேச்சு

(வவுனியா)

தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சுமார் மூன்று மணிநேரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் (08ம் பக்கம் பார்க்க)

## தேசியப் பட்டியல் எம்.பி தெரிவில்

4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சாம்பவி தணிகை மாறனின் நெறியாள்கையில் தமிழீழ யாள்கையில் புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்கள் வழங்கும் ''ஒரே ஒரு சாவு'' எனும் நாடகம்

(08ம் பக்கம் பார்க்க)

### அரசியல் பணிகளை மேற்கொள்ள

## விடுதலைப் புலிகள் நாளையே தீவுப்பகுதிகளுக்குச் செல்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் நாளை திங்கட்கிழமை அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக தீவகப் பகுதிகளுக்கு செல்லவுள்ளனர்.

தீவுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு படையினர் 12நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

இதனைப் புலிகள் ஏற்க மறுத்தமையால் இவ்விடயம் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இதனையடுத்து விடுதலைப் புலிப் பிரமுகர்கள் நாளை தீவகம் செல்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ)

## வடமராட்சி மீனவர்கள் நேற்று வீதி மறிப்பில் ஈடுபட்டனர்!

(திருநெல்வேலி)

வடமராட்சி இன்பருட்டிப் பகுதியில் நேற்றுக் காலை மீனவர்கள் வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் நேற்றுக்காலை கரைதிரும்பிய போது பாஸ் எடுக்காமல் தொழிலுக்குச் சென்றமையால் கரைதிரும்ப முடியாது எனத் தெரிவித்த கடற்படையினர் அவர்களை கடலில் தரித்து நிறுத்தினர்.

இதனால் நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் ஒன்று திரண்டு நேற்றுக் காலை 7மணியளவில் சுப்பர்மடம் பருத்தித்துறை வீதியை மறித்து மறியல் போரில் ஈடுபட்டனர்.

(08ம் பக்கம் பார்க்க)

## தேசியப் பட்டியல் எம். பி தெரிவில் இழுபறிநிலை: சங்கரி வன்னியில்

(வவுனியா)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் மறைவையொட்டி ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு தேசியப் பட்டியல் மூலம் எம்பியை நியமனம் செய்வதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் நிலவும் இழுபறிநிலையை அடுத்து கூட்டணியின் உபதலைவரும் யாழ். மாவட்ட எம்பியுமான வீ. ஆனந்தசங்கரி நேற்று கிளிநொச்சி சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமரர் சிவசிதம்பரத்தின் வெற்றிடத்தை நிரப்புவதில் கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஒரு கருத்தையும், கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம். பி இன்னொரு கருத்தையும் தெரிவித்திருப்பதை அடுத்தே புதிய எம். பி நியமனத்தில் இழுபறி நிலை காணப்படுகிறது.

இந் நிலையில் வ. ஆனந்தசங்கரி தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக நேற்று கிளிநொச்சி சென்றுள்ளார்.

(08ம் பக்கம் பார்க்க)

## அரசு –விடுதலைப் புலிகள்பேச்சு நிகழ்ச்சி நிரல் தயார் நிலையில்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரச சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை எப்போது ஆரம்பிப்பது? இப் பேச்சுவார்த்தையின் போது எந்த விடயங்கள் குறித்துப் பேசுவது எத்தனை நாட்களுக்குப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்துவது, பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது தத்தம் தலைமைப்பீடங்களுடன் அரசும், விடுதலைப்புலிகளும் எத்தனை நாளைக்கொருதடவை சந்திப்பது ஆகியன குறித்தும் இந்நிகழ்ச்சிநிரலில் இடம்பெற்றுள்ளது.

இந்தநிகழ்ச்சிநிரல் தொடர்பாக அடுத்தவாரம் கொழும்புக்கு வருகை

(08ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### விற்பனையாகிறது

எமதுவெளியீடுசள் (ஸ்ரீலங்கா புத்தகசாலை) சேன்றல்டட்ஸி சேசன் வெளியீடுகள் (இ. க. சிவஞானசுந்தரம்) வியாபாரிகளுக்கும் மொத்த மாகக் கொள்வனவு செய்வோருக்கும்20%கழிவுவழங்கப் படும். தொடர்பு கட்கு; ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, k. k. s வீதி, யாழ்ப்பாணம். (சி-4433)

### விற்பனையாகிறது

பிரயோக உயிரியல்(Unit-8) -300-/- (S.P. நாகநாதன்) பொருளியல் அலகுரீதியான வினாத்தொகுப்பு -125/- (1997-2002) க. கலாகரன் எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும் விற்பனையாளர் ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, k. k. s. வீதி, யாழ்ப்பாணம். (சி-4434)

### MATHS, ENGLISH

O/L பரீட்சையில் A, B, C பெறுபேறடையவும் ஆண்டு 8, 9, 10 உட்பட ஆங்கிலம் A/L, G A.Q, SPOKEN ENGLISH இருமாதங்களிலும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.Sc (Cey) 85, சிவன்கோவிலடி, சிவன் கோவில் பின்புறம், திருநெல்வேலி. (5420)

## இராசி பலன்

16 06.2002
ஆனி 2 ஞாயிறு
ஷஷ்டி மு இ 9 36 வரை
மகம் மு இ 9.35
இராகுகாலம் 4 23-5.53
நல்லநேரம் 8.53-10.23

**மேடம்**

அதிக பிரயாசை, நல்ல காரியம், அந்நியர் உதவி, போசன சுகம்.

**இடபம்**

நண்பர்கள் விருப்புக் குறைவு, சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப நன்மை, முயற்சி தாமதம்.

**மிதுனம்**

குடும்பக்கவலை அதிகாரிகள் மனஸ்தாபம், காரியத் தடங்கல், உடல் வியாதி.

**கடகம்**

நண்பர்கள் சந்திப்பு, தொழில் லாபம், எடுத்த காரியம் கைகூடும் சளஸ்திரசுகம்.

**சிங்கம்**

நினைத்தகாரியம்கைகூடும், பகைவர் நேசம், உடல்நலம், சுவாரஷ்யம்.

**கன்னி**

கௌரவக் குறைவு, வியாபாரச் சிறப்பு, புத்திரரால் சோகம், முயற்சி தாமதம்.

**துலாம்**

மனச்சஞ்சலம், ரோகபயம், காரிய தாமதம், உறவினரால் நன்மை.

**விருச்சிகம்**

சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, இனிய சம்பவம், காரிய அனுகூலம்.

**தனுசு**

எடுத்த முயற்சி தாமதம், பொருள் விரயம், சொத்துக்களால் நன்மை, குடும்பக் கவலை.

**மகரம**

பெரியோர் ஆதரவு, போசன சுகம், முயற்சி பலிதம், தெய்வசிந்தை.

**கும்பம்**

காரிய அலைச்சல், தனவிரயம், உறவினர் சந்திப்பு.

**மீனம்**

குடும்ப சுகம், முயற்சி கைகூடும், பெரியோரால் நன்மை, தொழில் சிறப்பு;

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

வளவன்

# தாய்லாந்தில் அரசு-புலிகள் சமாதானப் பேச்சு நிகழ்ச்சி நிரல் பூர்த்தி

(கொழும்பு)

தாய்லாந்தில் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சிநிரல் பூர்த்தியாகிவிட்டதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

நோர்வேயின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட இந் நிகழ்ச்சிநிரல் இன்னும் சில தினங்களிற்குள் அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக நோர்வே தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சிநிரல் சம்பந்தமான செய்திகளை இலங்கைச் சமாதானச் செயலகம் ஊர்ஜிதப் படுத்தினாலும் இது தொடர்பான முழு விபரங்களையும் செயலகம் இன்னும் வெளியிடவில்லை.

இருதரப்பினருக்கும் நோர்வே அரசினால் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கு அளித்த பதில்களின் அடிப்படையிலேயே இந் நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டுள்ளதாக நோர்வே தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயினால் தயாரிக்கப்பட்ட இந் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இரு தரப்புக்களிடமிருந்தும் கிடைக்கும் பதில்களின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளுக்கான திகதி நிர்ணயிக்கப் படவுள்ளது என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பாதுகாப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திகதியை புலிகள நிர்ணயிக்க வேண்டுமெனவும், திகதியை அறிவிப்பதிலேயே சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தங்கியிருப்பதாகவும் கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ.8)

## அமைச்சர் ஆரம்பித்துவைத்தா

(உடுவில்)

யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு வந்துசேர்ந்த மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் சுன்னாகம் தபாலகத்தில் தொலைத் தொடர்பு சேவை ஒன்றை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

சுன்னாகம் தபாலதிபர் ஐ. லோகஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளும் அரசியற் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (த-216)

## சனசமூக நிலைய பொன் விழா

(மானிப்பாய்)

நவாலி சென் பீற்றேஸ் சனசமூக நிலையத்தின் பொன்விழா இன்று மாலை 6.00 மணிக்கு நவாலி சென் பீற்றேஸ் ஆலய முன்றலில் நிலையத்தின் தலைவர் பொ. இம்மானுவேல் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பட்டிமன்றம், இசைநாடகம், சரித்திர நாடகம், நகைச்சுவைக் கதம்பம் ஆகிய நிகழ்ச்சிகள் உட்பட பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (த-232)

## மீன்பிடி தடை தளர்வு பற்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மீன் பிடிப்பதற்கு நடைமுறையில் இருந்துவந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் இடங்கள தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ் செயலகத்தில் அரச அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ் குடாநாட்டில் உள்ள சகல மீனவர் சங்கங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது. (உ-6)

## திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி இன்று நடைபெறவுள்ளது.

முதலாவது திருப்பலிகாலை 6.30 மணிக்கும் இரண்டாவது திருப்பலி காலை 7.45 மணிக்கு யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெறும். (த-232)

## மக்கள் வங்கி கிளை உரும்பிராயில்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின வலிகிழக்கு மக்களுக்கான கருமபீடமொன்று உரும்பிராய் சந்தியில் எதிர்வரும் 19ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கரும பீடத்தில் சாதாரண சேமிப்புக்கணக்கு, நிலையான வைப்பு, முதலீட்டு சேமிப்புக்கணக்கு, நடைமுறைக் கணக்கு, உட்பட ஏனைய விசேட கணக்குகளும் சேவைகளும் இடம்பெறுமென்று மக்கள் வங்கியின் பிரதான கிளை முகாமையாளர் எஸ். தங்கசிவம் தெரிவித்துள்ளார். (இ)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கி, வர்த்தக வங்கி, ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின்மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று மாலை 5 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (த 5)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு நிலையத் தலைவர் பூ. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும், வலிகிழக்கு சனசமூகநிலைய அபிவிருத்திஅலுவலர் திருமதி த. பாஸ்கரன், கோப்பாய் தெற்கு கிராம உத்தியோகத்தர் எஸ் தயாபரன், வலி கிழக்குப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே. சுதாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

## மரதன்ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜா இராமலிங்கவித்தியாலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி எதிர் வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-19)


## அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் நடாத்தும் தமிழ் விழா - 2002

காலம்
16 . 06 . 2002 இன்று பி. ப 4.00
இடம்
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி
தலைவர்
சொல்வேந்தர் ந. சிவநேசன்
(காப்பாளர் அமுதசுரபி கலாமன்றம்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் பொன்- பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி எஸ்- சிவலிங்கராசா
(தமிழ்த்துறைத் தலைவர். யாழ். பல்கலைக்கழகம்)
திரு க சிவானந்தமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்
கலாநிதி ப. புஸ்பரட்ணம்
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்
திரு ச. இளம்பரிதி
யாழ். மாவட்ட, அரசியற் துறைப் பொறுப்பாளர்)
கௌரவ விருந்தினர்கள்
திரு வ. ஆறுமுகம்
(அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி)
திரு க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராம உத்தியோகத்தர்)

### கலை நிகழ்வுகள்

''குற்றவாளிக் கூண்டில்
இன்றைய இளைஞர் யுவதிகள்''

| குற்றம் சுமத்துவோர் | மறுப்போர் |
|---|---|
| திரு ந. விஜயசுந்தரம் (ஆசிரியர்) | திரு தி. செல்வமனோகரன் (யாழ். பல்கலைக்கழகம்) |
| திரு ஈ. சந்தானபவன் (யாழ். பல்கலைக்கழகம்) | திரு அ. காந்தரூபன் (யாழ். பல்கலைக்கழகம்) |

நடுவர்
சொல்வேந்தர் ந. சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

மீள்பார்வை
''கவிஞர்கள் பார்வையில் காதல்''
கம்பன்:- திரு தி. செல்வமனோகரன்
வள்ளுவன்:- திரு அ. காந்தரூபன்
பாரதி:-திரு இராஜேஸ்கண்ணா
(விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
மகாகவி:- ச. கருணாகரன்

கவியரங்கம்
### 'எங்கே போகிறோம்'

தலைவர்
கவிஞர் கலாநிதி இ. முருகையன்
கவிஞர்கள் திரு வசந்தன்
திரு வே. இளையகுட்டி
திரு ந. விஜயசுந்தரம்
திரு தி. வேல்நம்பி

### பட்டிமன்றம்

கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவிற்குப் பெரிதும் காரணமாக இருப்பவர்கள் இளைஞர்களா? முதியவர்களா?

| இளைஞர்கள் | முதியவர்கள் |
|---|---|
| திரு இ. நித்தியானந்தன் (கலாசார உத்தியோகத்தர்) | திரு ஈ.சந்தானபவன் (யாழ். பல்கலைக்கழகம்) |
| திரு நா. விஜயகுமார் (ஆசிரியர்) | திரு த. சிறீகரன் (புள்ளிவிபர உத்தியோகத்தர்) |
| திரு மு. சிவப்பிரகாசம் (ஆசிரியர்) | திரு பொ.சற்குணநாதன் (ஆசிரியர்) |

நடுவர் தி. வேல்நம்பி
நாடகம்

இசை நிகழ்வு
அமுதசுரபியின் இன்னிசை கானங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அமுதசுரபி கலாமன்றத்தினர்

# ஆசிரியர்கள் இடமாற்றம்

# உடனடியாக வட-கிழக்கில் நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குமாகாணத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர்களால் இரண்டாம் தவணைக் காலத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் சகல ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களும் கடந்ததிங்கட்கிழமை முதல் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும்,

எதிர்காலத்தில் எவ்விதஇடமாற்றங்களையும் மாகாண கல்விப்பணிப்பாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மேற்கொள்ள வேண்டாம்எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பானசுற்றறிக்கையை வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் சகல வலய கல்விப்பணிப்பாளர்களுக்கும்அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலர்களால் அடிக்கடி இரண்டாம் தவணைக்காலத்தில் அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதால் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றது. இதனால்,

● இடமாற்றங்கள் வருடத்தின் ஆரம்ப, இறுதிப் பகுதியில் மட்டும் சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரில் மாத்திரமே வருட இடை நடுவில் இடமாற்றம் செய்வதற்கு அனுமதிவழங்கப் பட்டுள்ளது.

● சகல இடமாற்றங்களையும் ஜூன் 10 ஆம்திகதிமுதல் நிறுத்தி வைத்து இவ்வருடம் முடியும் வரை இடமாற்றங்கள் செய்யவேண்டாம் என அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலயத்திற்கு வெளியே இடமாற்றம் கோரும் விண்ணப்பத்தையோ, மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் கோரும் விண்ணப்பத்தையோ வலயக்கல்விப்பணிப்பாளர்கள் சிபார்சு செய்து அனுப்பி வைக்க வேண்டாம் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## குருநாகல் மாவட்ட வர்த்தகர்கள் 40 பேர் யாழ். வந்துசென்றனர்

(யாழ்ப்பாணம்)

குருநாகல் மாவட்ட கைத்தொழில் சேவைகள் மன்றத்தின் பிரதிநிதிகள் 40 பேர், கைத்தொழில் சேவைகள் மன்றப் பணிப்பாளர் காமினி சேனநாயக்கா தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் யாழ். வணிகர் கழகப் பணிமனையில் யாழ். வர்த்தகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர்.

இக் கலந்துரையாடலின் போது இக்குழுவுக்குத் தலைமை வகித்து வந்துள்ள காமினி சேனநாயக்கா உரையாற்றுகையில்,

தமது நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில்மட்டுமன்றி வடக்கு-கிழக்கு முழுமையும் விஸ்தரிக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன், தமது குழுவில் அங்கம் பெற்றுள்ள விவசாய உற்பத்திப்பொருள், தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திப் பொருள், விவசாய இயந்திரங்கள், உழவு இயந்திரம் அதன் உதிரிப்பாகங்கள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப், உருக்குஇரும்புப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், காகிதப்பொருட்கள், புகையிலை சார்ந்த பொருட்களின் உற்பத்தி முகவர்களுடன் யாழ். தொழில் முயற்சியாளர்கள் தொடர்புகளை ஏற்படுத்தும் பட்சத்தில் இயன்றவரை உதவிகளை வழங்கக் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவர்கள் தமது ஒருநாள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று ஊர் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## கடவுச் சீட்டை விரைவாக பெறுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஒரே நாள் கடவுச்சீட்டை 2 மணித்தியாலங்களிலும் சாதாரண கடவுச் சீட்டை 10 நாட்களிலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கதெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கள் வழங்கும் முறையில் கொண்டு வரப்படும் மாற்றங்கள் குறித்து உள் நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஊடகவியலாளர் மத்தியில் விளக்கிக் கூறும் போது இதனைத் தெரிவித்தார்.

இவ்வளவு காலமும் சாதாரண கடவுச்சீட்டைப்பெறஒரு மாத காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குடிவரவுகுடியகல்வுதிணைக்கள உத்தியோகத்தர்கள் இனிமேல் 12 மணித்தியாலங்கள் சேவையில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-9)

## உலகவங்கிக் குழு அம்பாறை விஜயம்

(அம்பாறை)

உலக வங்கியின் தூதுக்குழுவினர்நாளை திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

உலகவங்கியின் நிதியுதவியுடன் அங்கு மேற்கொள்ளப் பட்டு வரும் வேலைத்திட்டங்களை அவதானிப்பதுடன், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக இக்குழு ஆராயவுள்ளது.

அக்கரைப்பற்று கண்ணகிபுரம், திருப்பூவிலூர்தாண்டியடி போன்ற இடங்களிற்கு செல்லும் இவர்கள் அங்கு அரசாங்க அதிபரையும் சந்தித்து பேசவுள்ளனர் (உ-8)

## நாவற்குழி கண்ணாடி தொழிற்சாலையை மீள இயக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி கண்ணாடித் தொழிற்சாலை மீள இயங்கவுள்ளது.

கடந்த கால போர் அனர்த்தங்களால் செயலிழந்திருந்த மேற்படி தொழிற்சாலையை மீள இயக்குவதன் மூலம் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என அதன் உரிமையாளர் ரி. எஸ்.மகேந்திரன் தெரிவித்தார். (உ)

## பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதில் நாட்டம்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பெருமளவு மக்கள்யாழ். செயலகத்தை நாடிவருகின்றனர்.

வன்னியில் இருந்து அதிக தொகையான மக்கள் யாழ்ப்பாணம் வருவதையடுத்தும், செயலகப் பணிகள் சில நாள் ஸ்தம்பிதமடைந்தமையுமே பெருமளவு மக்கள் அங்கு படையெடுக்கக் காரணமாக அமைந்துள்ளது. (உ-10)

## பட்டமளிப்பு விழா

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 42வது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு விழாவும், இன்று காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ)

## வவுனியாவில் ஆரம்பக் கல்விக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர்களின் ஆரம்பக்கல்வி தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம செவ்வாய்க்கிழமை வவுனியா கல்வித்திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவராசா மற்றும் குடாநாட்டின் 5 வலயங்களின் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் வடக்கு கிழக்கு உட்பட 4 மாவட்டங்களின்கல்விப்பணிப்பாளர்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.( உ-10)

## 'சர்வமதப் பிரியன்' கண்காட்சி நாளைவரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய சர்வமதப்பிரியன் கண்காட்சி நாளை திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ -3)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 07

(உற்சவகாலம்)



### அமைதியில் செலுத்துவை தாயே

கடல்நடு விருந்து கண்ணிமைக் காது
காத்தருள் புரியும் கண்மணித் தாயே!
படமெடுத் தாடும் பாம்பதன் நீழலைப்
பாங்குறச் சிவனொடு பகிர்ந்திடும் பாவையே!
விடமதை மிடற்றில் வியந்திட(த்) தடுத்த
வித்தகி சவுந்தரி உத்தமி பூரணி!
திடமுடன் எம்மைத் திருப்பதியில் மலர்ச்சியில்
திழைத்திட அமைதியில் செலுத்துவை தாயே!

நயினைக்கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை

### பார்வதி அருள் நல்குமே!

சுத்து மேழ்கடல் சூழும் நயினையில்
கருணை மாமலை யாகவே
சித்தி யேதரு தேவி நாரணி
சீரணி நாக பூசணி
சத்தி யேயுமா சர்ப்ப வாகினி
சாம்பவி அருள் புங்கவி
பக்தி யோடுவுன் பாத மேத்தினோம்
பார்வதி யருள் நல்குமே

நயினை கவிஞர்-இராகுலன்

### நலம தரும் நாயகி

நலம் தரும் நாயகியே நயினை நாகபூசணியே
தினம் உன்னை தொழுவோர் துயர்தனை
தீர்ப்பவளே அம்மா! அம்மா! அம்மா!
நாவால் கூவி அழைத்து கும்பிட்டு
தொழுவோர் துணையாகும் சுந்தரியே!
பரமனின் பத்தினியே
நாகம் குடைபிடிக்க கடல்நீர் ஆர்ப்பரிக்க
கங்கை கரையில் அமர்ந்தவளே நாகபூசணியே!
நாடி உமைவந்தோம் கண்பாரம்மா
கருமாரியே நாகபூசணியே

விஷ்ணு மகாலிங்கம்

### எனக்கொரு வரந்தருவாய்

எனக்கொரு வரந்தருவாய் நயினைநாக பூஷணியே
எனக்கொரு வரந்தருவாய்

ஒருவரந்தருவதால் உனக்கொரு குறையுமில்லை
உலகினில் கண்ட தெய்வம் உனையன்றியாரம்மா

வந்தவர் வாழ்ந்தினும் வசை மொழி கூறினும்
மாநிலமே போற்றும் நயினை நாக பூஷணியே
கெஞ்சுகின்றேன் அம்மா ஒரு வரந்தருவாய்

பு. சசிகாந்தன்

### எம்துயர் தீரம்மா

அலையாழி சூழ்நயினை நாகபூசணியே
நிலையான அமைதி என்றும் நிலைத்திட வேண்டும் அம்மா
கலையாத கல்வி தரும் காமாட்சி அம்மா
பக்தர்கள் பலர் சூழ்ந்து நித்தம் உமை அழைக்கும்
சித்தம் வழங்கிடுவாய் ஸ்ரீ நாகபூசணியே
நாகம் பூக்கொணர்ந்து நாளும் சூட்டுமுன் பாதம்
பணிந்து பகிர்கின்றோம் பாமாலையே

உ. கௌரிசங்கர்

### தாயே வரம் அருள்வாய்

தேவி உன் திருவருளை நாடித்தொழுவதற்கு
கூடி வருகின்றோம் தென்பகுதிப் பக்தருடன்
அனுதினமும் நாம் அன்போடு தொழுவதற்கும்
சாந்தி சமாதானம் சமத்துவங்கள் நிலைத்திடவும்
ஆச்சியரே வரம் அருள்வாய்
அன்புடனே போற்றி போற்றி

க. சதீபன்

# பொ. ஐ. மு. உறுப்பினர் எவரும் சமாதானத்தை எதிர்க்கவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் தெளிவுபடுத்துகை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளினை எதிர்க்கவில்லையென எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தினகர ஊடகவலையமைப்பு ஏற்பாடு செய்திருந்த 'போர்நிறுத்தத்திற்கு அப்பால்' என்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சமாதானம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஆனால், அதை நிலைநாட்டக்கூடியவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவா அல்லது ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்ககுமாரதுங்காவா என்பதே மக்களின் தற்போதைய கேள்வியாகும்.

சமாதான முயற்சிகள்எனக் கூறிக் கொண்டு எந்தவொரு கட்சியும் இரகசியமான திட்டங்களை முன்வைக்க முனையக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தாராள வர்த்தக கொள்கை வாஷிங்டன்பிரகடனத்திற்கு இலங்கை முழு ஆதரவு

(கொழும்பு)

தாராளவர்த்தகக்கொள்கையை இலங்கை பரிபூரணமாகஆதரிக்கின்றதுஎன வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வாஷிங்டனில் சர்வதேச ஜனநாயகசமாஜத்தின்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாராளவர்த்தகக்கொள்கை தொடர்பாக வாஷிங்டனின் பிரகடனத்தை இலங்கை ஆதரிப்பதாகவும்,

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன், இந்தியாவுடனும் இது தொடர்பில் ஆராய்ந்துவருவதாகவும் அவர் அங்கு சுட்டிக் காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் யாவும் நாட்டின்பொருளாதாரத்தை பலப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

எனவே, இனப்பிரச்சினைக்கான அடிப்படைக்கொள்கைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதன்மூலமே, நாட்டின்பொருளாதாரக் கொள்கைகள் புனரமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## "பல்லவி மாலை" இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மிருதங்க ஞானவாரி சி. துரைராசா எழுதிய பல்லவி மாலை நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

## இன்று ஒதெல்லோ நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில், இன்று மாலை 6. 45 மணிக்கு மன்ற அரங்கில் ஒதெல்லோ(Othello) நாடகம் மேடையேறவுள்ளது.

காதல்வெறுப்புபொறாமை போன்ற உணர்ச்சிகளிடையே உருவாகும் முரண்பாடுகளை அடிப்படையாக வைத்து சேஸ்பியரால் எழுத்துருவாக்கப்பட்ட இந்த நாடகம் திருமறைக் கலாமன்ற கலைஞர்களின் நடிப்பில் மேடையேறுவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## (புனித அந்தோனியர்ா திருநாள் கவிதை)

### வெள்ளமென அருளமுது சிந்தும் சுந்தர அந்தோனியாரே

அந்த நாள் மணப்பந்தலில் தண்ணீர் கந்த மதுவாகும்
விந்தை பூத்த ஏந்தல்!
ஐந்து அப்பங்கள் ஐயாயிரம் உதரங்கள் உவகையுற
தந்து த விய சாந்தன்!
ஐந்து காயங்களாற குருதிமழை துளிர
இந்த அவனியை மீட்ட வேந்தன்!
சுந்தர மா முனியே யுன் செந்தாமரைக் கைகள்
வந்துறைந்தார்!
இந்த நாள் நின் திருநாளாப் திசைபாவுந்
தித்திக்க எம்
சிந்தையெல்லாம் செங்கரும்பாகுதே!
அந்தரித்தோர் அனாதை எளியோரின்
நந்தாமணிச் சுடர் வண்ணமே!
வெந்து; நெந்து; வெம்பியே; எந்தையே! யுன்
சந்திரோதயந்தேடி; மைந்தர் யாம்
வந்தோமையா!
செந்தமிழ் இதழ் கமழ்ப் பொய்கையோரச்
சந்தனச் செந்தேனே!
செவ்வாயின் செவ்வானச் செங்கதிரே!
உந்தன் மந்திர மா மலர்க் கரங்களின்
நல்வரங்கள் சி(த)ந்திடுவாய்!
'சிந்து'-வெள்ளம் பெருக்கெனவே!
சந்த தமுமெமை ஆளும் தேவ மா மந்திரியே!
சந்த அந்தோனியாரே; அருள் வள்ளலே!

தே.ச. வில்சன்;முகமாலை

## உடத்தலவின்ன படுகொலை 7 சந்தேக நபர்கள் நேற்று விடுதலை

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

கண்டி தெல்தெனிய நீதிவான் இனோக்க றணசிங்க முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, இவர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு போதிய சாட்சியங்கள்இல்லையென அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியதை அடுத்தே மஜிஸ்திரேட் நீதிவான் விடுதலை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ் வழக்குடன் தொடர்புபட்டதாக குற்றம்சாட்டப்படும் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் அவரது இரு புதல்வர்களும் விசாரணையின் போது ஆஜர்படுத்தப்பட்டனர்.

இம்மாதம் 17 ஆம் திகதி வரை இவ்வழக்கு விசாரணையை ஒத்திவைத்த நீதிவான், அனுருத்தவின் புதல்வர்களான லொகான் ரத்வத்தை, சானுகரத்வத்தை உட்பட 10 பேரை இம்மாதம் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். உ-8)

## மண்டபத் திறப்பும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் அமைக்கப்பட்ட காராள சிங்கம் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிபர் எஸ். அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. (உ)

## திரியாயில் மீள் குடியேற்றம் பிரதமர் கவனத்திற்கு கொண்டு செல்ல ஆயத்தம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட திரியாய் கிராமத்தில் அமைந்துள்ள கடற்படைமுகாமை அங்கிருந்து அகற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிடம் கோரிக்கைவிடப்போவதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் இரா. சம்பந்தன்தெரிவித்துள்ளார்.

திரியாயில், மக்களைமீளக்குடியேற்றும் நோக்குடன் கடந்த புதன்கிழமை அப்பகுதியை பார்வையிடச் சென்ற குழுவினரை நிலாவெளி இராணுவத்தளபதிகே.கே.ஜே சில்வா இடை மறித்தது தொடர்பாக முறையிடப் போவதாகவும்,

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் கைச் சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். இதனைத் தடைசெய்வதற்கு படையினருக்கு அனுமதி இல்லை யெனவும்இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழ்க் கூட்டமைப்பு பிரதமரை சந்திக்கும் போது இவ்விடயத்தினை முக்கியப்படுத்தி ஆராய விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆயிரத்து 400 குடும்பங்கள் வாழ்ந்து வந்த அக்கிராமத்தில் கடற்படையினர் குடிகொண்ட கட்டடங்கள் தவிர ஏனையவை தரை மட்டமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## காவலூர் அரச அதிபர் பிரிவில் 257 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இது வரை 257 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு A–9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நாளில் இருந்து இற்றை வரையில், முன்பு இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இது வரை காரைநகரில் 162 குடும்பங்களும் ஊர்காவற்றுறையில் 81 குடும்பங்களும் அனலை தீவில் 11குடும்பங்களும் எழுவை தீவில் 3 குடும்பங்களுமாக 257 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

காரைநகரில் தோப்புக்காடு, சாந்திபுரம் கிராமங்களில் 197 குடும்பங்கள் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

## ஏற்ற தளபாட வசதியின்றி மாணவர்கள் அவதி

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் இயல்பு நிலை திரும்பியிருப்பதையடுத்து அங்கு மீளஇயங்கும் பாடசாலைகளில் இணையும் மாணவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

எனினும் மேற்படி பாடசாலைகளில் ஏற்ற தளபாட வசதிகளின்மையால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் இடையூறுகள் ஏற்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. (உ.42)

## நாகர் கோவில் வீதி திறப்பின்அவசியத்தை ஆசிரியர்களும் வலியுறுத்து

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்குச் சென்றுவர வசதியாக நாகர் கோவில் ஊடான வீதியைத் திறக்க வேண்டுமென வேறிடங்களில் இருந்துஅங்குசென்று கற்பித்து வரும்ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் சுமுகநிலைஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து,

செயலிழந்திருந்த வடமராட்சி கிழக்குப் பாடசாலைகள் பலவும்மீளஇயங்க ஆரம்பித்துள்ளன.

எனினும் அங்கு செல்வதற்கான நாகர் கோவில் வீதியைத் திறந்து பாவனைக்கு விட படையினர் அனுமதியளிக்கவில்லை.

இதனால், ஆசிரியர்கள் அதிகபணச்செலவுடன், நீண்ட நேரத்தைச்செலவிட்டு முகமாலையூடாகவே தமது கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகச் சென்று வருகின்றனர். (உ-42)

## மலத்தியோன் விசிறல்!

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கின் மாமுனை, செம்பியன்பற்று, தாழையடி, உடுத்துறைஆளியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளில் பெருகிவரும் நுளம்பையும், அதனாலுண்டாகும் மலேரியாக் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும் வகையில் மலத்தியோன் விசிறப்பட்டுவருகின்றது. (உ-42)

## இந்திய ரூபாவை இலங்கையில் புழக்கத்திற்கு விடலாமா?

### இரு நாடுகளும் ஆலோசனை

(கொழும்பு)

இந்திய ரூபாவை இலங்கைக்குள் புழக்கத்துக்கு விடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் இந்தியா சென்று இந்திய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறனுடன் பேச்சுக்கள் நடத்தி விட்டு இலங்கை திரும்பியுள்ள வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர்ரவி கருணா நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி நிதித்துறை நிபுணர்களின் ஆலோசனைகளைப்பெற்றபின் முடிவு செய்யப்படவுள்ளதாக முரசொலிமாறன் கருணா நாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொ.ஐ.மு.அரசின் காலத்திலும் பேச்சுக்கள் நடைபெற்றதாகவும், இதனால் இந்தியாவிலிருந்து சுற்றுலாப்பயணிகளைமேலும் அதிகமாக கவரமுடியுமென்றும் அறியப்படுகிறது. (உ)

# இன்று ஒரு தகவல்

## அற்புத மூலிகை-அறுகு

சிவபெருமானுக்குரிய மலை என்ன, ஆறு என்ன நாடு எது, ஊர் எது? என்றெல்லாம் சொல்லித் தசாங்கம் பாடிய மாணிக்கவாசகர் சிவபெருமானுக்கு உவப்பான மாலை எது? என்ற கேள்வியைக் கேட்டு அறுகுதான் உவப்பான மாலை என்று விடைதருகிறார்.

...தீயவினைநாளும்
அணுகா வண்ணம்
நாயேனை ஆளுடையான்
தாளி அறுகாம் உவந்த
தார்!

சிவாலயங்களிலே அறுகை மாலையாகத் தொடுத்து அணிவிக்கும் வழக்கம் இன்றும் உண்டு. பசிய அறுகுமாலை மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும் காட்சியாகும்!

பிள்ளையார் வழிபாட்டிலும் அறுகு முதலிடம் பெறுகிறது. நம்நாட்டுத் தலைசிறந்த மூலிகைகளிலே அறுகும் ஒன்று! பலவகை நோய்களைக் கண்டிக்கும் ஆற்றல் அறுகுக்கு உண்டு அறுகு ஒரு தெய்வ மூலிகை என்றே அகத்தியர் பாராட்டியிருக்கிறார்.

வாதம், பித்தம், கபம் என்னும் மூன்றாலும் வரும் குற்றங்களை நீக்கும் ஆற்றல் உடையது அறுகுமட்டும்தான்! அறுகம் வேரை நன்றாகச் சிதைத்துக்கண்ட அளவுக்கு 8 மடங்கு தண்ணீர் விட்டு நன்றாக வற்றும் வரை அடுப்பில் வைப்பதே அறுகங்கியாழம். இந்தக் கியாழத்தை பெரியவர்கள் காலை, மாலை சாப்பாட்டின் முன் அரை ஆழாக்கு வீதம் சாப்பிட்டு வரமுக்குற்றங்களும் நீங்கும். மூன்றுநாள் ஆறுவேளை போதுமானது. மூன்று மாதங்களுக்கு ஒருதடவை இதை உண்டுவருவது மிகவும் நன்மையைத் தரும்.

இதய நோய்களைத் தீர்க்கும் வல்லமையும் அறுகு கியாழத்திற்கு உண்டு. இதயவெப்பம், இதயப் படபடப்பு இதயமெலிவு, இதய இரத்தக் கொதிப்பு முதலிய நோய்களுக்கு அறுகை வேருடன் (சமூலம்) இடித்துப் பிழிந்து சாறெடுத்து அரை ஆழாக்கு வீதம் பருகிவர வேண்டும். மூன்று மண்டல காலத்திலே இதயநோய் நீங்கி வலிமை பெறும்! அறுகங்கியாழத்தை காலை மாலை இரண்டு அவுன்சு சாப்பிட்டுவர இரத்தம் சுத்தியாகும். ரத்தத்திலுள்ள விஷக்கிருமிகள் நாளடைவில் நீங்கிவிடும்.

நாம்உண்ணும்உணவுகளில் சில விஷங்கள் இருக்கின்றன. இந்த விஷங்களை கண்டிக்கும் பொருட்டு மாதம் தோறும்மூன்றுநாளாவது அறுகங்கியாழம் சாப்பிட வேண்டும். அறுகங்கியாழத்தால் வாய்கொப்பளிக்கவாய்ப்புண் மறையும்.

நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, மஞ்சள் நீர், காமாலை முதலிய நோய்களுக்கும் அறுகங்கியாழம் நல்லமருந்தாகும்.

சிரநோய்களை தவிர்க்கும் ஆற்றல் அறுகுக்குண்டு. அறுகந்தைலம் சிரநோய்களை நீக்கிக் கண்ணுக்குக் குளிர்ச்சியைத்தரும். பித்த மீறுதல், அதிக வெப்பம் முதலியவற்றால் தூக்கம் வராது அவதிப்படுவோருக்கு அறுகந்தைலம் சிறிது தேய்த்தால் உடனே தூக்கம்வரும் ஆரம்பபைத்திய நோய்களும் இத் தைலத்தால் குணமடையும்,

ஒருபடி அறுகங்கியாழமும் கால்படி எண்ணெயும் கலந்து நீர்வற்றக் காய்ச்சிஎடுத்தலே அறுகந்தைலம் தயாரிக்கும் முறையாகும்.

சொறி, சிரங்கு, தேமல், புழுக்கடி முதலிய தொற்று நோய்களுக்கும் அறுகங்கியாழத்துடன் கால்படி பசுநெய் கலந்து காய்ச்சி வடித்து உணவுக்கு முன் ஒரு கரண்டி வீதம் உண்டுவர குணமாகும். இது மூலவருத்தத்தையும் குணமாக்கும்.

விஷக்கடிக்கு இக்கியாழம் பூசகுணமடையும். குடற்புண், வாய்ப்புண், கோபம், கவலை போன்ற யாவற்றுக்கும் அறுகங்கியாழம்சிறந்த மருந்தாகும்.

தெய்வ மூலிகையாகிய அறுகை உபயோகப்படுத்தி ஆரோக்கியமாக வாழ்வோமாக! அறுகை பொன்னிலும் மிகப் போற்றுவோமாக.

மானியர் சுபா

# புத்தரின் தந்தச்சின்ன மலர் வழிபாட்டுக்கு 1500 பவுணில் பூஜாசனம்

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகையில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் தந்தச்சின்னத்துக்கு மலர் வழிபாடு செய்வதற்கென ஆயிரத்து 500 பவுண் தங்கத்தால் உருவாக்கப்பட்ட மலர் ஆசனம் ஒன்றை கண்டி மல்வத்த பீடாதிபதி வழங்கவுள்ளார்.

தலதா மாளிகையிலுள்ள புத்தர் சிலையின் கோபுரப் பேழைக்கருகில் மலர்பூஜை செய்வதற்கென்று இது உருவாக்கப்பட்டுள்ளது.

கண்டியின் சிற்பிகளினால் உருவாக்கப்பட்ட இந்தமலர் ஆசனத்திற்கு பூஜாசனம் என்னும் நாமமும்சூட்டப்பட்டுள்ளது. (உ-8)

# விவசாயிகள் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிச் சபைத் தலைவர் உட்பட கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை முக்கிய உயரதிகாரிகள் குழு அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தது.

கமத்தொழில் காப்புறுதிச் சபைத் தலைவர் எல். பி. பி. திஸநாயக்கா, காப்புறுதிச் சபை பிரதிப் பணிப்பாளர் எஸ். டபிள்யு. ஜெயலத், கால்நடை காப்புறுதி உதவிப் பணிப்பாளர் எஸ்.வீரசிங்கா, கமத்தொழில் ஒய்வூதியப் பணிப்பாளர் டட்லி வீரக்கொடி, விவசாய மீன் பிடி ஒய்வூதிய உதவிப் பணிப்பாளர் எஸ். டபிள்யு கே. டி' மஞ்ஞுநாயக்க ஆகியோர் இக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இவர்கள் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இத்துறையில் அமுல்படுத்தப்பட வேண்டிய முன்னேற்றகரமான திட்டங்கள் ஆகியன தொடர்பாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பெரும் பாக உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும்நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுவதென உறுதியளித்தனர். (உ-19)

# பிரிட்டன் பொலிஸ் சேவையில்

# ஆசிய நாட்டவரும் இணையலாம்

## ஆனால்மகாராணிமீதுவிசுவாசம்அவசியம்

(கொழும்பு)

பிரிட்டனின் பொலிஸ் சேவைக்கு பொது நலவாய நாடுகளிலிருந்து ஆட்கள் திரட்டப்படவுள்ளனர்.

குறுகியகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆசியநாட்டவரும் கறுப்பர்களும் இதன் பிரகாரம் சேர்க்கப்படவுள்ளனர்.

நன்கு ஆங்கில அறிவுடையவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர்என்பதுடன்மகாராணிக்கு அவர்கள் விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் எடுத்தல் வேண்டும்.

மெட்ரபோலிற்றன்பொலிஸ் பிரிவுக்கு இதன்மூலம் 35 ஆயிரம் பேரை சேர்க்க எண்ணியிருப்பதாக ஸ்கொட்லண்ட்யாட் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

# குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவர்க்கு மனித உரிமைக் கல்வி

## மனித உரிமை ஆ. கு. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நட்டில நிச்சயம் சமாதானம் மலரும் எனநாம் எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறான உடன்பாடு காணப்பட்ட பல்வேறு நாடுகளிலும் குறுகிய காலத்தில் அது மீறப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் இங்கு ஒப்பந்தம் உரியமுறையில்கடைப்பிடிக்கபடுவதுஇதனைஉறுதிப்படுத்துவது போல் உள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஹாட்ஸ்றேகுணதிலக மற்றும் உறுப்பினர்களான திருமதி மனோகரி முத்தெட்டுகம, ஆர். சி. கருணாகரன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது கடந்த செவ்வாய்க்கிழமை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்திய போது மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தினர்.

அவர்கள் மேலும் கருத்துக் கூறுகையில்;

யுத்தநிறுத்தத்தின்பின்யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மோசமான மனித உரிமை மீறல்கல் இடம்பெறவில்லை.

ஆனாலும் யாழில் மீனவர் தமது தொழிலை மேற்கொள்ள படையினரால் தடைகள் போடப்பட்டுள்ளதாகவும்.

பொது இடங்களில் படையினா நிலைகொண்டுள்ளதாகவும் அறிகின்றோம். இதனை தமிழ்மக்களின் சகஜ வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடாக பல பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

மனித உரிமைகள் பற்றிய கல்வியை குடா நாட்டில் உள்ள அனைத்துபாடசாலைகளிலும் கற்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று தெரிவித்தனர்.

இதன்மூலம் எதிர்காலச்சந்ததியை நல்ல வழியில் இட்டுச் செல்ல முடியுமென அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். (உ-19,6)

# கடந்த மாதம் 1.6 எம்.எம் மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சென்றமாதம் உயர் வெப்பநிலையாக 34.2 பாகை செல்சியசும், தாழ்வெப்பநிலையாக 25.5 பாகைசெல்சியசும் சராசரி வெப்பநிலையாக 30.5 பாகை செல்சியசும் பதிவாகியுள்ளது.

கடந்த மாதம் 1.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி காலநிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது. (உ-19)

# திரைப்படக் காட்சியும் விமர்சனமும்

(யாழ்ப்பாணம்)

சலனசித்திரம் வடமராட்சிக் கிளையினால் சேது, வெளிநாட்டு மாப்பிள்ளை, ஆகிய திரைப்படங்கள் இன்று பி.ப.3.00 மணிக்கு வதிரியிலுள்ள அலுவலகத்தில் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளன.

இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இத்திரைப்படங்களின்விமர்சனம் இடம் பெறவுள்ளது.

ஆர்வமுள்ளோர் இவற்றில் கலந்து கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-106)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான சலனசித்திரம் அமைப்பின் யாழ். பிரதேசக் கிளையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்களின் பிரதேச ரீதியான செயற்பாடுகளை விஸ்தரித்தல், சம்பந்தமாக இக் கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படவுள்ளதாலும், புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாலும் உறுப்பினர்களைத் தவறாது சமூகம் தருமாறு கிளைப் பொதுச் செயலாளர் எஸ்.எம்.இராஜேஸ்கனி கேட்டுள்ளார். (உ-106)

# தமிழ் மொழி போதிக்கும் ஆசிரியர்களுக்கு இருநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம் 6-11 வரையான வகுப்புகளுக்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை நடத்துவதற்கென தேசிய கல்வி நிறுவகத்தில் இருந்து அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

காலை 9.00 மணிமுதல் பி. ப. 4.00 மணிவரை இடம் பெறவுள்ள இக்கருத்தரங்கில் வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 70 ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர். (த-10)

வங்களாவடித் துறைமுகத்தை

# மக்கள் பாவனைக்கு அனுமதி வழங்குக!

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு வங்களாவடி துறைமுகத்தினைப் பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு அப்பகுதி மக்கள் கடற்படையினரைக்கோரியுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தையொட்டி பெருமளவு மக்கள் சிரமமின்றி வந்து செல்வதற்கு வசதியாக இந்தத் துறைமுகத்தைத்திறந்துவிடவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-75)

## சிந்தனைக்கு விருந்து

## நோயாளிகளிடம் திருட்டு!

போதனா வைத்திய சாலையிலே
பொங்கும் கடலென நோயாளர்
நோதல்நொம் பலத்துடன் நாள்தோறும்
நூறா யிரமாய்த் திரள்கின்றார்
பாதகர் சிலரிவர் இடைப்புகுந்து
பற்பல திருட்டுகள் புரிகின்றார்
ஈதுபோல் பாவம் பிறிதுண்டோ?
எம்மவர் இழிவிதற் கிடுண்டோ?

-பழையவன்

நொம்பலம்-வருத்தம் (உபாதை)

# சரியான விளக்கம் வழங்கத் தவறின் கட்சியில் இருந்து விலக்கப்படுவர்

## றிச்சாட்பத்திரன, பௌஸி ஆகியோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கு துரோகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கு விளக்கமளிக்குமாறுகட்சியின் எம்.பிக்களான றிச்சாட் பத்திரன ஏ.எச்.எம். பௌசிஆகியோர் கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி எம்.பிக்கள் இருவரும் அண்மைக் காலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத் திட்டங்களுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து வந்துள்ளனர்.

றிச்சாட்பத்திரன காலிமா வட்டத்தில் ஐ.தே.க. அமைச்சர்களுடன் வைபவங்களில் கலந்துகொண்டுள்ளார்.

கட்சிக்கு பாதகமாயமையக் கூடியதான அறிக்கைகளை வெளியிட்டமைக்காக அவர்கள்மீது ஏன்ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதற்கு விளக்கந் தருமாறு இருவரையும் பொ.ஐ.மு. பொதுச் செயலாளர் டீ.எம்.ஜயரத்ன கேட்டுள்ளார்.

திருப்திகரமான விளக்கங்கள் கிடைக்காத பட்சத்தில் அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர். (உ)

# புத்தர்சிலை கொள்ளை புத்தளம்பொலிஸில்புகார்

(புத்தளம்)

புத்தளம், அநுராதபுரம், வீதியில் உள்ள விகாரை ஒன்றில் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்தபுத்தர் சிலை மற்றும் வான் என்பவற்றை கொள்ளையர் கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றுள்ளதாக புத்தளம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வானில் ஆயுதங்களுடன் சென்ற 12 பேர் அடங்கிய கொள்ளைக்கோஷ்டிவிகாரையில் இருந்தபிக்கு ஒருவரைக் கட்டிப் போட்டுவிட்டு 3 அடி உயரமான புராதன புத்தர் சிலையை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# பக்தர்கள் மீதும் படையினர் கெடுபிடி

(துன்னாலை)

நயினை நாகபூசணியம்மன் ஆலய உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்கள், பாதுகாப்பு படையினரால் சோதனையிடப்படுகின்றனர்.

வாகனங்கள் மூலமாக மேற்படி ஆலய தரிசனத்திற்குச் செல்வோர் அல்லைப்பிட்டி சோதனை சாவடியில் இறக்கப்படுவதுடன், அவர்களின் பொருட்கள் மற்றும் அடையாள அட்டை என்பவற்றினைப் படையினர் பார்வையிடுகின்றனர்.

இதனால் பல்வேறு அசௌகரியங்களை அவர்கள் எதிர் நோக்குவதுடன், தற்போதையை அரசியல் முன்னெடுப்புகளுக்குச்சற்றும் பொருத்தமில்லாத இந்நடவடிக்கை குறித்து அதிருப்தியும் வெளியிட்டு வருகின்றனர். (உ-41)

# தொடர்பு நிலையம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

நூறு நாள அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தினுள் தொடர்பு நிலையம் நேற்று மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் இணையச்சுய சேவை வசதிகள், மின்அஞ்சல் இணையச் சேவைகள், அஞ்சல் தொலைநகல் சேவைகள், ரெலிமெயில் சேவைகள் என்பவற்றை இனிவரும் காலத்தில் குடாநாட்டு மக்கள் பெற்றுக்கொள்ள முடியும். (உ-10)

## வாக்காளர் அட்டையில் வழு

# பெப்ரல் அமைப்பு நிவிர்த்தி செய்ய முனைப்பு

(கொழும்பு)

வாக்குரிமைபெற்றவர்களின் பெயர் விபரங்கள் வாக்காளர் அட்டைசளில் சரியான முறையில் இடம் பெற்றுள்ளதா என்பதையும் வாக்குரிமையற்றவர்களின் பெயர். விபரங்கள் இவ் அட்டைகளில் உள்ளடக்கப்பட்டனவா என்பதை கண்டறியவென பெப்ரல் அமைப்பு விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம்வடக்கு -கிழக்கு மாகாணங்கள் உட்பட 21 மாவட்டங்களில்இடம்பெற்று வருவதாக இவ் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்தார்.

கடந்த 15 வருடகாலத்தில் தாம் பல தேர்தல்களை கண்காணித்ததன் பிரகாரம் வாக்காளர் இடாப்புகளில் பல குறைபாடுகளை கண்டறிய முடிந்ததாகவும் இவற்றை நிவிர்த்தி செய்யவே இவ் விசேட திட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# பிரி. போக்குவரத்து நிறுவன உயர் அதிகாரிகள் கொழும்பு வருகை

(கொழும்பு)

அரசாங்கத்தின்கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் மயப்படுத்தப் பட்ட போக்கு வரத்து சேவையின் 35 சதவீதத்தை குத்தகை அடிப்படையில் பெற்று இயக்கும் நோக்கத்துடன் பிரிட்டனின் மிகப் பெரும் போக்குவரத்து நிறுவனம் தனது உயர்அதிகாரிகளை கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவர்கள் இதுதொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபற்றி உயர் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், வரவு செலவுத் திட்டத்தில் பிரகடனப்படுத்தப் பட்டது போன்று தனியார்மயப்படுத்தல் நடவடிக்கைகள் ஆகஸ்ட் மாதத்திலிருந்து செயற்படுத்தப்படும் எனவும்,

அரசாங்கத்தின் நோக்கம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்களை இந்த பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு குத்தகைக்கு கொடுப்பதாகும். ஆனால்ஆட்குறைப்புகள்எதுவும் செய்யப்படாது எனவும் தெரிவித்தார். (உ)

# ஏழு எண்ணில்

சமயங்களுமே ஏழு சுவர்க்கங்கள்இருப்பதாகநம்புகின்றன. இதனால் மகிழ்ச்சியின் அதி உச்ச நிலையில் திளைப்பவனைப் பார்த்து ஏழாவது சுவர்க்கத்தில் இருக்கிறான் எனக் கூறும் வழக்கமும் உண்டு.

சூரிய ஒளியில் ஏழுவர்ணங்கள் அடங்கியுள்ளன ஊதா. கருநீலம்' நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்புஎன்பனவே அவையாகும். சூரிய ஒளியைக் கண்ணாடி அரியம் ஒன்றின் ஊடாகச் செலுத்தும் போது மறுபுறத்தில்இந்த ஏழுவர்ணங்களும் ஒன்றின் கீழ் ஒன்றாக விழுவதை நாம் அவதானிக்கலாம். வானத்தில் நாம்காணும் வானவில்லின் நிறங்கள் ஏழும் இதனையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

உலகத்தில் மனிதனால் உருவாக்கப்பட்ட அதிசயங்கள், தாஜ்மஹால், பிரமிட்ஸ் என்பன உள்ளடங்கலாக ஏழுஉள்ளன.

இறைவன் ஆறு நாட்களில் இந்த உலகத்தைப் படைத்துவிட்டு ஏழாவது நாளில் ஓய்வெடுத்துக் கொண்டான் என பைபிளில் கூறப்பட்டுள்ளது. உலக மக்களில் சில பிரிவினர் ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக வாரத்தின் ஏழாவது நாளான சனிக்கிழமை ஓய்வு நாளாக அனுஷ்டிக்கின்றனர். தனது விவேகத்தினால் இந்த பூமியையும் கடலையும் ஒருங்கே ஆட்சி செய்த சொலமன் மன்னன் அவனது அதிகாரத்தினை எடுத்துக்காட்டுவதற்கு ஏழுவித இலச்சினைகளைப் பயன்படுத்தினான் எனக் கூறப்படுகிறது.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் செய்யக் கூடிய புண்ணியச் செயல்கள் ஏழு உள்ளன. அதே போல அவன் அறிந்தோ அறியாமலோ செய்யக் கூடிய பாவச் செயல்களும் ஏழு வரை இருக்கின்றன.

ஏழு வயதுக் குழந்தை ஒன்றும் எழுபது வயதுக் கிழவர் ஒருவரும் ஒரே மாதிரியாக நடந்து கொள்கிறார்கள் என்பது மலையாள மொழியின் வழக்கத்தில் உள்ள ஒரு கூற்றாகும்.

மேலைத் தேச இசையிலும் கீழைத் தேச இசையிலும் ஏழு சுரங்கள் அடங்கியுள்ளன. அவற்றை வித்தியாசமான முறைகளில் இணைப்பதன் மூலம் மனிதனின் மனதைச் சோக ரசனையில் ஆழ்த்தக் கூடிய ராகங்களை உருவாக்க முடியும். அதே போல அவன் மனதை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தக் கூடிய ஆனந்த ராகங்களையும் இசைக்க முடியும்.

# அமைச்சர் ஹக்கீம் கனடா பயணம்

(கொழும்பு)

சர்வதேச இஸ்லாமிய அழைப்பியக்கத்தின் இணை அமைப்பான மக்கள் தலைமைத்துவ அமைப்பின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக துறைமுக கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் கனடா சென்றுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் முஸ்லிம் சமூகத்தின் பரிமாணம் என்ற தலைப்பில் ஹக்கீம் அங்கு கருத்துரை வழங்கவுள்ளார்.

54 நாடுகள் கலந்து கொள்ளும் இம் மாநாட்டினை அடுத்து, கனடாவில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் ஒழுங்கு செய்துள்ள பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார். (உ-8)

# ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுச் சபைநடத்தும் யாழ். மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டித் தொடரில்,

இன்று காலை 8.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கிறாஸ் கொப் பேஸ் வி.க,

மு.ப 9.15 மணிக்கு ஒல்ட் கேல்ஸ் வி.க எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி வி.க,

மு.ப. 10.00 மணிக்கு உடற்கல்வி அணி எதிர் சென்றலைற்ஸ் வி.க. ஆகியன யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளன.

பி.ப. 2.30மணிக்கு அரை இறுதியாட்டங்கள் 1,2 இல் தோற்ற அணிகளும்,

பி.ப. 4.00 மணிக்கு அரையிறுதியாட்டங்கள் 1,2 இல் வென்ற அணிகளும் மோதவுள்ளன. (உ-3)

## நூலகத் திறப்பும் மெய் வல்லுநர்

# திறனாய்வும்

(யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு மகா வித்தியாலய நூலகத் திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும் இன்று மு.ப. 9.30 மணிக்கு அதிபர் ந.பத்மநாதன் தலைமையில், பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி. சறோஜினிதேவி இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன், வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் திருமதி இளம்பிறை, வேலணை அஞ்சல் அதிபர் க. சரவணநாதன், வைத்திய கலாநிதி செல்வி பொ. கலாநிதிதேவி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

# மூவருக்கு குருப்பட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் குருத்துவக் கல்வியினை முடித்த மூவருக்கு நேற்றைய தினம் குருப்பட்டம் வழங்கப்பட்டது.

யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, யாழ் மரி அன்னை பேராலயத்தில் அருட்சகோதரர்களான அலோசியஸ், ம.பத்திநாதர் ச.பாஸ்கரன் ஆகியோரே அருட்பணியாளர்களாக பணிக் குருத்துவத்திற்கு திருநிலைப்படுத்தப்பட்டனர். (உ-2)

# மாணவர்கள் சிரமம்

(செம்பியன்பற்று)

தாழையடி றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோ.க. த.க.பாடசாலை என்பனவற்றை மீள இயக்காமையால் அப்பகுதி மாணவர்கள் நீண்டதூரம் சென்று ஆழியவளை மற்றும் மருதங்கேணிப் பாடசாலைகளில் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (உ-42)

# கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச் சபை நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில்,

இன்று பி.ப. 4.00 மணிக்கு கிறாஸ் கொப்பர் வி.க, எதிர் ஜொலிஸ்ரார் வி.க,

பி.ப. 5.00 மணிக்கு உடற்கல்வி வி.க, எதிர் சென்றலைட் வி.க. ஆகியன கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# கிளின்ரன் பெற்ற ஊதியம் 92 இலட்சம் டொலர்கள்

## அவா ஆற்றிய உரைகளுக்காக

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் உலகளாவிய ரீதியில் ஆற்றிய சொற்பொழிவுகளுக்காக 92 இலட்சம் அமெரிக்க டொலர்களை ஊதியமாகப் பெற்றுள்ளார்.

அவரது மனைவி கிலாரி கிளின்ரன் வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டமைக்காக 28 இலட்சம் அமெரிக்க டொலர்களை அந் நாட்டரசு அவருக்கு வழங்கியுள்ளது.

இதே வேளை, இவ்விருவர் மீதும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைக் கொண்டு நடத்துவதற்காக 13 இலட்சம் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாகவும்,

இன்னும் பதினேழரை இலட்சம்ரூபா வரை செலவு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் அமெரிக்கநிதியறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

பில் கிளின்ரனின் இரகசியமாக பேணப்பட்டு வரும் நிதியத்தில் 10 முதல் 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இருப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் தமது சொத்துக்களினதும், அறிக்கையை வெளியிட வேண்டுமென்ற விதிக்கமையவே பில் கிளின்ரனின் அறிக்கையில் இவ் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (உ-8)

செல்வத்துள் செல்வஞ்செவிச் செல்வம்
அச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை
குறள்

# வலம்புரி

## தகவல் நிலையம்

யாழ்ப்பாணம் செயலகத்தில் இன்று தகவல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. தகவல் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் இந் நிலையத்தினைத் திறந்து வைக்கவுள்ளார்.

21 ம் நூற்றாண்டில் தகவல் தொடர்பாடல்களின் அதீத வளர்ச்சி உலகையே சுருங்க வைத்துள்ளது. சாதாரண முடங்கலுடன் ஆரம்பமான தகவல் பரிமாறல்கள் காலப்போக்கில் தொலைபேசி, கணனி, ஈமெயில் இன்ரனெற் என்றவாறு வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி கண்டு இன்று உலகின் எந்த மூலையில் என்ன நிகழ்வு நடைபெற்றாலும் அதனை உடனுக்குடன் அறிந்துகொள்ளக் கூடியவாறு தகவல் பரிமாற்றங்கள் முன்னேற்றமடைந்துள்ளன.

எனினும் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ்- முஸ்லிம் மக்களைப்பொறுத்தவரை தகவல் தொழில்நுட்ப அறிவு அவர்களை இன்னமும் எட்டவில்லையென்றே கூறவேண்டும்.

யுத்த சூழ்நிலை, இடப்பெயர்வு போன்றவற்றால் நம் எதிர்காலச் சந்ததியினர் தகவல் தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

வடபகுதியில் கணனியை இன்னமும் கண்ணால் பார்க்காத மாணவர்களும் இருக்கிறார்கள்.

தகவல் தொழில்நுட்பத்தில் எங்கள் மாணவ சமூகத்தின் பின்னடைவு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

அதேபோல் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் பத்திரிகைத்துறை சார் அறிவியலைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இதுவரை கிடைக்கவில்லை. அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்துவதாக இன்றைய பத்திரிகையாளர் கருத்தரங்கு அமைவதுடன் தொடர்ந்தும் பத்திரிகையாளர்களின் துறைசார் புலமையை வளர்க்க புதிய திட்டங்களை ஏற்படுத்துவதும் அவசியமாகும்.

இத் திட்டங்களை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் அவர்கள் ஏற்படுத்துவார் என நம்புவதுடன் யாழ்ப்பாணத்தில் அவர் முன்னெடுத்துள்ள தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என்பதும் இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது.

# துன்பப்படுபவர்களை மீட்பதற்காக

# இறைவன்காட்டியவழிஉடன்படிக்கை



## பரமபிதா காட்டிய பாதை

உலக வரலாற்றுக் கண்ணோட்டத்திலே வலியவன் மெலியவனை அடிமைப்படுத்துவதிலும், பின்னர் மெலியவன் தனது உரிமைகளை நிலைநாட்ட, வலியவருக்கு எதிரான உரிமைப் போராட்டம் நடத்துவதும், இறுதியில் ஒப்பந்தங்கள் மூலம் சமாதான நிலைப்பாட்டை அடைந்து வந்துள்ளதையும் நாம் அறிகின்றோம். பல வேளைகளிலே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மீறப்படுதலையும், ஒப்பந்தங்கள் செயற்படுவதையும், கிழிக்கப்பட்டு பழைய நிலைகள் தொடர்வதையும், துன்பங்கள் மாறி, மாறி வந்து மக்கள் விரக்தியின் விழிம்புக்குச் செல்லும் நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

### இஸ்ராலேயர் ஒப்பந்தம்

அடிமைத்த எகிப்தில் நின்று சுதந்திர கானான் நாட்டை அடைய பாலைவனப் பயணங்கள் தொடர்ந்த போது, இறைவன் இஸ்ராலேயருடன் ஒப்பந்தம் செய்கின்றார் (உடன்படிக்கை) 'நான் எகிப்திற்குச் செய்ததையும் கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்து சேரச் செய்ததையும், நீங்கள் கண்டீர்கள். நீங்கள்! என்வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால், அனைத்துலகும் என் உடைமையெனினும் நீங்களே எல்லா மக்களினங்களிலும் என்தனிச் சொத்தாவீர்கள் ' (விடுதலைப் பயணம் 19:4-6) என்று இறைவன் மேசே மூலமாக மக்களுக்கு அறிவுறுத்தினார்.

### ஒப்பந்தத்தின் வலிமை

இஸ்ராயேல் மக்கள் இறைவனோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பலவேளைகள் நடக்காமையால் கொடிய துன்பங்களை அனுபவித்தார்கள். உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக நடந்த வேளைகளில் எல்லாம் இறைவனுடைய ஆசீரை அபரிவிதமாகப் பெற்றுக் கொண்டார்கள் இறைவனுக்கும் மக்களுக்கும் இடையிலான நெருங்கிய உறவானது வலுப்பெற்று அவர்களின் விடுதலைப் பயணம் இலக்கை நோக்கி நகர்த்தப்பட்டது. மந்தபுத்தியும், அக்கிரமச் செயற்பாடுகளும் நிறைந்தவர்கள் மனம் மாறி இறை அன்புக்கு கட்டுப்படத் தொடங்கினார்கள்.

### இன்றைய வரலாறுகள்

அண்மைக்கால வரலாறுகள் தொழில் நுட்ப விருத்தியின் செயற்பாடுகளாக மாறி நவீன யுக்திகளின் அடிப்படையில் நடைபெறுகின்றன. உயிர்களின் மாண்பினைவிட யுக்திகளின் திறமைகளை நிலைநாட்டுவனவாகவே காணப்படுகின்றன. செய்யப்படும் ஒவ்வொரு நன்மைத்தன நிழலின் பின்பும் ஒட்டுமொத்தமான தரக்கணிப்பீடே நடைபெறுகின்றது. தொண்டர் நிறுவனங்களாக இவை வெளிப்படுகின்றன. ஓர் இனத்தின் தனித்துவத்திலும் விட, தேசியத்தின் நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதவிழுமியங்கள். நவீனத்துவத்தின் கால்களுக்குக் கீழ் மிதிக்கப்படுகின்றன. புதுமைத்துவம் என்ற போர்வையில் மரபுகள் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

### இயேசுவின் பதிவுள்ளம்

இயேசுவின் காலத்திலும் ஏழை எளிய மக்கள் புறக்கணிக்கப்பட்டு, துன்புறுவதை இயேசு பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. சிற்றூர்கள் தோறும் சென்று நற்செய்தி கூறி, நோய் பிணிகளை எல்லாம் குணமாக்கி அன்புப்பணி செய்தார். அம்மக்கள் 'ஆயரில்லா ஆடுகளைப் போல அலைக்களிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்' (மத்:9: 36) அவர்களுக்கு பணிசெய்ய அறுவடையின் ஆண்டவரை மன்றாடும்படி சீடர்களை அவர் வேண்டினார். பணிசெய்ய முன்வரும் நல்ல உள்ளங்களை உற்சாகப் படுத்த வேண்டும். பணிகளுக்கு நாமும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இல்லையெனில் எம் தலைவிதிகளை நாமே சுமந்து தீர்க்க வேண்டும். துன்பங்கள் மத்தியில் சமூகத்துக்காக உழைக்க ஒவ்வொரு அன்பு உள்ளமும் முற்படும் போது எமது ஒற்றுமையின் பலம் விடுதலை வாழ்வைப் பெற்றுத்தரும்.

**அன்ரனி பீற்றர்**

# ஏழு எண்ணில் அடங்கியுள்ள மகிமையும்

# மனித வாழ்வில் அதன் பிணைப்பும்

இலத்தீன், சமஸ்கிருதம் என்பன ஒரேமொழியிலிருந்து தோன்றிய இருவேறுமொழிகளா என்பதைச் சரியாகக் கூறமுடியாவிட்டாலும் அவற்றில் உள்ள செப்ரெம்' சப்த' என்னும் சொற்கள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான ஓசையைக்கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். அத்தோடு அவை இரண்டும் குறித்து நிற்பது ஒரே பொருளைத்தான்- அதுதான் இலக்கம் ஏழு.

கணிதத்துறையிலும் ஏழு எல்லாவற்றுக்கும் அடிப்படையானஒரு இலக்கம் எனக் கருதப்படுகிறது. அதேவேளை எண்சாஸ்திரக்கலை அதனை அறிவு அல்லது ஞானத்தை வளர்ப்பதோடு சம்பந்தப்பட்ட ஒரு இலக்கம் என வர்ணிக்கிறது. பெரும்பாலான சமயங்களும் புராணங்களும் ஏழு ஒரு புனிதம் நிறைந்த இலக்கம் எனக் கூறுகின்றன.

இந்த இலக்கம்மனிதவாழ்க்கையுடன் மிக நெருங்கிய தொடர்பினைக்கொண்டிருக்கிறது. ஒரு குழந்தையானது தாயின் கருப்பையில் வளரும் போது அதன் வளர்ச்சி ஏழாவது மாதத்திலேயே பூரணமடைகிறது. குழந்தை பிறந்ததன் பின்னர் அதன் தொப் தில்லை. சிலர் இளமையிலே இறந்து விடுகிறார்கள்.

அதேசமயம் வேறுசிலர்குடு குடு கிழவர்களாகும்வரை உயிர் வாழ்கிறார்கள். எப்படியிருந்த போதிலும் நம் அனைவரினதும் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிடுக்கின்றன என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

தொகுப்பு:
**அ. சோமபாலன்**
திருநெல்வேலி

புள் கொடிவிழுவது ஏழாவது நாளில்தான். ஏழாவது மாதத்தில் குழந்தைக்குப் பற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. அது 28(7X4) வாரத்தில்நடக்கத் தொடங்குகிறது.

மனித வாழ்க்கையானது ஏழின் பத்து மடங்குச் சமமான காலப்பகுதியைக் கொண்டுள்ளது. எனப் புனித பைபிள் நூலில் கூறப்பட்டிருக்கிறது. மனிதன் பிறப்பது தொடக்கம் இறப்பது வரை ஏழுபராயங்களைக் கடந்து செல்கிறான் என ஆங்கிலக் கவிஞர் சேர்ஸ்பியர் தமது கவிதையில் குறிப்பிடுகிறார். ஆனால்அனைவருமேஅனைத்துப் பராயங்களும் பூர்த்தியாகும் வரை உயிர் வாழ்வ

ஒருவாரந்தில்ஏழு நாட்கள் இருக்கின்றன ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் சனிக்கிழமைவரைமுறையே சூரியன், சந்திரன், செவ்வாய் புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஏழு கிரகங்களினால் அவை ஆட்சி செய்யப்படுகின்றன. நாம் வாழும் பூமி சூரியனைச் சுற்றி வருகின்றதுஅதே போன்று இந்த ஏழுகிரகங்களும் தங்களுக்கு உரித்தான ஏழு சுற்றுப் பாதைகள் வழியாக சூரியனைச் சுற்றிப் பயணஞ்செய்துகொண்டிருக்கின்றன எனப் புனித திருகுர்ரான் நூல் கூறுகிறது.

அநேகமாக உலகின் எல்லா

(6-ம் யக்கம் பார்க்க)

### தினசரி தியானம்

#### துன்பம்

துன்பக் கடலில் துளைந்ததெலாந் தீர்ந்ததே
இன்பக் கடலில் இருமென்ன-அன்பில்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவிகாட்ட
விரைந்துவரும் ஆனந்தமே.


- தாயுமானவர்

கல்வி கற்க இயலாத மாணாக்கன் பள்ளிக் கூடத்தில் துன்பப்படுகிறான். உயிர் வாழ்க்கை என்னும் பள்ளிக்கூடத்தில் ஒழுங்குப்பாடு என்னும் கல்வி கற்க இயலாதவர்களெல்லாம் துன்பப்படுகின்றனர். கேடு நினைக்கிறவனும் கேடு செய்கிறவனும் ஒரே நிலையில் இருக்கின்றனர். மனம் ஒழுங்கு கெட்டிருக்கும்போது அது துன்பம் தூய்க்கிறது. மனதிலுள்ள அழுக்கே துன்பமாகத் தோன்றுகிறது.


- ஶ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

**யாழ் சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வி.டி ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான கிறிக்கெற் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று மோதும் யாழ் பல்கலைக் கழக அணி, கொக்குவில் சனசமூக நிலைய அணியை சேர்ந்த வீரர்களை படத்தில் காணலாம்.**

யாழ் பல்கலைக்கழக அணி



கொக்குவில் சனசமூக நிலைய அணி



# அமைச்சர் இம்தியாசுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு

(யாழ்ப்பர்ணம்)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோருக்கு பலாலி விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன், வடக்கு கிழக்கு மாகாண ரெலிகொம் முகாமையாளர் எஸ். கனகசூரியர, ரெலிகொம் பொறியியலாளர் எஸ். அன்ரன்ராஜ் ஆகியோர் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சுன்னாகம், அச்சுவேலி தபால் நிலையங்களுக் குச் சென்று புதிய தொலைபேசி இணைப்புக்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்டு வரும் பிரதம தபால் திணைககள கட்டிடத்தையும், யாழ் பொதுசன நூலகத்தையும் பார்வையிட்டார்.

(வ)

# தனியார் பஸ் மோதி இளம்பெண் மரணம்

# இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் நடாத்தும் வி. டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது ஓவர்களைக் கொண்ட கிறிக்கெற் சுற்றுப் போட்டியின் இறு அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்டு வரும் பிரதம தபால் திணைகள கட்டிடத்தையும், யாழ் பொதுசன

# அரசியல் சீர்திருத்தம் நிறைவேறாவிடின் பொதுத்தேர்தலை அறிவிக்க உத்தேசம்

## ஐ.தே.க வட்டாரங்கள் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

2002 டிசெம்பர் மாதம் 5ம் திகதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சட்ட ரீதியான வாய்ப்பைத் தடுக்கும் விதத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அரசியற் சட்ட திருத்தத்தை நிறைவேற்ற முடியாது போனால் ஒரு திடீர் பொதுத் தேர்தலை அறிவிப்பது பற்றி ஐ.தே.முன்னணி அரசின் முக்கிய தலைவர்கள் தீவிரமாக ஆலோசித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதுள்ள அரசியல்சட்டப்படி ஒரு பொதுத் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றம் தனது பெரும்பான்மையைப் பாவித்து தீர்மானிக்க முடியும். இதற்கு ஒரு வருடம் முடியும் வரை காத்திருக்கத்தேவையில்லை. என்று ஐ.தே.மு வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்வாறு இன்றைய் நிலையில் ஒரு திடீர் தேர்தல் வரும் போது குறைந்தபட்சம் மேலும் பத்து ஆசனங்களையாவது ஐ.தே.முன்னணி பெறமுடியும். என்றும் அவ்வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. அத்தகைய ஒரு தேர்தலில் தமது சமாதானச்சாதனைகளை மக்களிடம் முன் வைத்து, மக்கள் ஆணையை கோர முடியும் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இன்றைய நிலையில், ஒரு வருடம் முடிவில் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதை தடுக்கும் அரசியற் சட்டத்திருத்த மூலத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவது நிச்சயமற்றது. அதற்கு எதிரக்கட்சியிலிருந்து 20எம்.பிக்களின் ஆதரவு தேவை இதனால் ஒரு திடீர் தேர்தல் அனுகூலமான பயன்களைத்தரும் என்று பிரதமர் ரணில்விகிரமசிங்காவும், உயர்மட்ட அமைச்சர்களும் சிந்தித்து வருகிறார்கள் என்றும் ஐ.தே.மு.வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ)

# பிரதமருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு ஒப்பந்த மீறல்கள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், நிறைவேற்றப்படாத, விடயங்கள் குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கேட்டுள்ளார்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்திருந்தனர்.

இச் சந்திப்பின் போது கூட்டமைப்பு எம்.பிக்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் மற்றும் பல விடயங்கள் தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தார்.

இராணுவம் வெளியேறாத பாடசாலைகள், ஆலயங்கள், மற்றும் பொது இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறுவது தொடர்பாகவும் விளககமான அறிக்கை ஒன்றைத் தருமாறும் பிரத்மர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை அடுத்து இம்மாதம் 19ம் திகதி இவ்விடயம் தொடர்பாக மாநாடு ஒன்று நடைபெற இருப்பதாகவும் இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர், உள்துறை அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம)

### கொடிய யுத்தத்தினால்...

கடந்த பலவருடங்களாக இந் நாட்டில் நிலவும் ஆயுத கலாசாரம் ஒழிந்து அமைதியான சூழ்நிலை இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் நமக்குத் தேவை இல்லை.

யுத்தத்தை நடத்துவது, கலவரங்களை ஏற்படுத்துவது சுலபமான காரியங்களாகும். ஆனால் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு நாம் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

யாழ் குடாநாட்டு மக்கள் தொலைத்தொடர்பு வசதிகள் அற்று எவ்வளவோ கஷ்டங்களை பல வருடங்களாக அனுபவித்துள்ளார்கள் இந்நிலை இன்று மாறியுள்ளது.

எம்மால் ஏற்படுத்தப்பட்டு வரும் தொலைத்தொடர்பு வசதிகளை வடமராட்சிக்கும் விஸ்தரிக்கவுள்ளோம். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் எமக்குத்தேவை என்றும் கூறினார்.

தொடர்ந்து பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தனது உரையை தமிழ் மொழியில் நிகழ்த்தினார். அவர் அங்கு பேசுகையில்:-

இலங்கையிலேயே மிகவும் உயர்ந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை நாம் யாழ்ப்பாணத்திலேயே

### சமாதானப் பேரவை...

பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பேசப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது.

இச்சந்திப்பின் போது தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த நிமலன் கார்த்திகேயன், எஸ். பாலகிருஷ்ணன் கலாநிதி கிங்ஸ்லி றொட்றிக்கோ, கலாநிதி ஜெயசிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (ம)

### தேசிய பட்டியல் எம்.பி...

இது இவ்வாறு இருக்க எம்.பி நியமனத்தில் காணப்படும் இழுபறி நிலையை அடுத்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையின் முக்கிய பிரமுகர் ஒருவரை புதிய எம்பியாக தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கலாம் என்று கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் கருதுவதாக கொழும்பில் உள்ள கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

### தாய்லாந்து ...

தரவுள்ள நோர்வேயின் பிரதிவெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனும், அரச தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

### முத்தமிழ் கலையரங்க...

மற்றும் கேணல் கிட்டு மாமா வில்லிசைக் குழுவினரின் "எங்கள் தலைவன் பிறந்தான்" எனும் வில்லிசை ஆகிய கலை நிகழ்வுகளும், முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகளும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வுகளைக் கண்டுகளிக்க அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(இ)

# உலக கிண்ண உதைபந்தாட்ட இரண்டாவது சுற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் வந்திருந்த ஊட கத் துறை அமைச்சர் இம்தியாஸ்

## தனியார் பஸ் மோதி இளம்பெண் மரணம்

(நுகேகொட)

நுகேகொடயில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் தனியார் பஸ் ஒன்று மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார். இவருடன் சென்ற இரண்டு பிள்ளைகள் படுகாயமடைந்தனர். (வ-5)


நாளை

வலம்புரியுடன்

சங்குநாதம்


றிக் கேடயத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது ஓவர்களைக் கொண்ட கிறிக்கெற் சுற்றுப் போட்டியின் இறு அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்டு வரும் பிரதம தபால் திணைகள கட்டிடத்தையும், யாழ் பொதுசன நூலகத்தையும் பார்வையிட்டார். (வ)

---

## வடமராட்சி மீனவர்கள்...

அந்தவழியாக வாகனங்களில் வந்த படையினரையும் பயணம் செல்ல விடாது மீனவர்கள் தடுத்து நிறுத்தினர். அத்துடன் தாம் மறியற் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான காரணத்தை படையினருக்கு விளக்கியதுடன் மீன்பிடித் தடைகள் அனைத்தும நீக்கப்பட்டமைக்கான பத்திரிகைச் செய்தியையும் படையினருக்கு காண்பித்தனர்.

இதனை அடுத்து மீனவர்கள் கரை திரும்ப அனுமதிக்கப்பட்டனர் வீதி மறிப்புப் போராட்டமும் முடிவுக்குவந்தது. (த-43)

தனது உரையை தமிழ் மொழியில் நிகழ்த்தினார். அவர் அங்கு பேசுகையில்:-

இலங்கையிலேயே மிகவும் உயர்ந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை நாம் யாழ்ப்பாணத்திலேயே அமைத்துள்ளோம். எமது யாழ்ப்பாண விஜயத்தின் போது கொடிய யுத்தத்தினால் உடைந்து போயுள்ள கட்டடங்களை மட்டுமல்லாமல் உடைந்த உள்ளங்களையும் காண்கின்றோம். இந்நிலையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மூவின மக்களும் இங்கு கூடியிருந்து நாட்டின் அபிவிருத்தியைப் பற்றிப் பேசுகின்றோம். இந்த சமாதான சூழ்நிலை மேலும் நீடிக்க வேண்டுமென்று நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போம் என்றும் கூறினார்.

இக் கலந்துரையாடலின் போது ஊடகத்துறை அமைச்சரின் செயலாளர் குமார் அமரசிங்கா, யாழ் மேயர் செல்லன் கந்தையன் வேலணை பிரதேச செயலாளர் எஸ். இரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். இவ்வைபவத்தில் முன்னாள் எம்.பி அலிஸா மௌலானாவும் கலந்து கொண்டார். (வ-10)

## உலக கிண்ண உதைபந்தாட்ட இரண்டாவது சுற்று ஆரம்பம்

(நிகாட்டா)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் இரண்டாவது சுற்றின் முதலாவது போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இதில் ஜேர்மனியை எதிர்த்து பரகுவே அணி விளையாடியதில் 1:0 என்ற கோல் கணக்கில் ஜேர்மன் அணி கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. இதுவரையும் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும் 2வது சுற்றிற்கு மேல் பரகுவே அணி முன்னேறிய:தில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டென்மார்க்குக்கும் இங்கிலாந்திற்குமிடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் இங்கிலாந்து அணி 3:0 என்ற நிலையில் டென்மார்க் அணியை தோல்வியடையச் செய்து கால் இறுதிப் போட்டிக்கு தெரிவானது. இதன் மூலம் இங்கிலாந்து அணி பிறேசில் அல்லது பெல்ஜியம் அணியுடன் மோத வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஜேர்மன் அணி மெக்சிக்கோவை அல்லது அமெரிக்காவை எதிர்த்து ஆட வாய்ப்புக்கள் உண்டு. (இ-5)


**10% தொடக்கம் 40% வரை கழிவு விலையில் விற்பனையாகின்றது**

மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் பட்டப் படிப்பிற்கான வைத்தியம், பொறியியல், வர்த்தகம், கணனி, மின்னியல பாடத்துக்கான நூல்கள் ஆங்கில, தமிழ் நாவல்கள், சிறுவர்களுக்கான சகல விதமான புத்தகங்கள், வாழ்த்து மடல்கள், எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
NO. 212 K.K.S வீதி,
யாழ்ப்பாணம்








CENTRE FOR PERFORMING ARTS
(THIRU MARAI KALA MANRAM)
PRESENTS
*A CONFLICT OF LOVE HATE & JEALOUSY*
*THE SHAKESPEAREAN TRAGEDY*
**"OTHELLO"**
THE MOOR OF VENICE
(ENGLISH PLAY)
**ஒதெல்லோ**
(ஆங்கில நாடகம்)

**DATE :** 16-06-2002 (TODAY)
**TIME :** 6.45 P.M.
**VENUE :** THIRU MARAI KALA MANRAM
ALL ARE WEL COME

238, Main Street, Jaffna
T.P. 021-2393 -C.P.A
*Web Site: www. cpateam.org*
(C/4435)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.